DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**STC.No.202/2025**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | கண்ணன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | தர்மலிங்கம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 07.05.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

__முதல் விசாரணை:__

நான் திருவேகம்பத்தூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2025 ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் வாகன தணிக்கைக்காக சார்பு ஆய்வாளர் மோகன், தலைமைக்காவலர் 466 மாணிக்கவாசகம் ஆகியோர்கள் திருவேகம்பத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காவதுகுடி விளக்கு அருகே வாகன தணிக்கை செய்தபோது இரு சக்கர வாகனத்தில் வந்த இருவரை விசாரித்து வாகனத்தை சோதனை செய்தபோது சுமார் 4 கிராம் எடையுள்ள கஞ்சாவை ஒரு சிறிய பையில் வைத்து அவர்கள் இருவரில் ஒருவரின் பேண்ட்

பாக்கெட்டில் இருந்தது. அவரைப்பற்றி விசாரித்தபோது அவர் தான் சொக்கநாதபுரத்தை சேர்ந்த அஜய் வர்மா என்று தெரிவித்தார். மற்றொரு நபரை பற்றி விசாரித்தபோது அவர் தான் சொக்கநாதபுரத்தை சேர்ந்த சரத்குமார் என்று தெரிவித்தார். மேற்படி இரண்டு நபர்களும் தற்போது நீதிமன்றத்தில் இல்லை, அவர்களைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். சாட்சியாக இருக்க பொதுமக்கள் யாரும் முன்வராததால் என் முன்னிலையிலும் சாட்சி மாணிக்கவாசகம் முன்னிலையிலும் மேற்படி கஞ்சாவையும் இரு சக்கர வாகனத்தையும் சார்பு ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையொப்பம் என்னுடையதுதான். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) பின்பு மாலை 18 மணிக்கு எதிரிகளையும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் காவல் நிலையம் கொண்டு வந்தோம். வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

1ம் எதிரியின் எந்த பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து கஞ்சாவை கைப்பற்றினோம் என்றால் தற்போது சரியாக ஞாபகமில்லை, ஆனால் பேண்ட் பாக்கெட்டில் இருந்துதான் கைப்பற்றினோம். சார்பு ஆய்வாளரின் விசாரணையில் 1ம் எதிரியின் சட்டைப்பையில் இருந்து கஞ்சாவை கைப்பற்றியதாக சொல்லியுள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. காவதுகுடி விளக்கு என்பது போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் சரிதான். போக்குவரத்து நிறைந்த பகுதியாக உள்ள நிலையில் சாட்சிக்கு யாரும் முன்வரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல, அந்த இடத்தில் பொதுவாக யாரும் முன்வருவது இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று காவதுகுடி விளக்கு பகுதியை தவிர வேறு இடத்தில் சோதனை செய்தோமா என்றால் இல்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொறு இடத்தில் சோதனை மேற்கொள்வோம். சார்பு ஆய்வாளர் விசாரணையில் சம்பவ தினத்தன்று ஆங்காங்கே சோதனை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சம்பவ தினத்தில் ஆங்காங்கே சோதனை செய்துவிட்டு கடைசியில்தான் காவதுகுடி விளக்கில் சோதனை மேற்கொண்டோம். சம்பவ தினத்தன்று ஆங்காங்கே சோதனை செய்தபோது எதிரிகளை தவிர வேறு யார் மீதாவது கஞ்சா வைத்திருந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. 1ம் எதிரியிடம் இருந்து கஞ்சாவை எங்களில் யார் கைப்பற்றியது என்றால் சார்பு ஆய்வாளர் தான் கைப்பற்றினார். நான் சுமாராக 4 கிராம் இருக்கும் என்பதால் அவ்வாறு எடையை குறிப்பிட்டுள்ளேன். எடை போட்டதை நான் நேரடியாக பார்க்கவில்லை. அதை எங்கே வைத்து எடை போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்மத கடிதத்தை யார் எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்றால் சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தில் தயார் செய்தார். சம்மத கடிதம் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு எதிரிகளை மிரட்டி கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கஞ்சாவை எங்கு யாரிடம் விற்பனைக்காக கொண்டு செல்கிறார்கள் என்று விசாரணையில் தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. 2ம் எதிரியின் மீது எதற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 2ம் எதிரியிடம் கஞ்சா இல்லை ஆனால் அவரும் 1ம் எதிரியுடன் சேர்ந்து கஞ்சா விற்பதாக தகவல் கிடைத்ததால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிரி 1ம் எதிரியுடன் சேர்ந்து கஞ்சா விற்பதாக தகவல்

கிடைத்ததாக சார்பு ஆய்வாளர் விசாணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் புள்ளி விபரத்திற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.